1979 மார்ச் 17]

120 படுக்கைகள் கொண்ட இந்த திருப்பத்தூர் ம த்துவ மனைக்கு இன்னும் அதிகமான மருத்துவர்களை நியமிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்தரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்புப் பிரிவுகள் தொடங்கு கின்ற நேரத்தில் மருத்துவர்களின் தேவைக்கு ஏற்றபடி மருத்து வர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்.

சீர்காழி அரசு மருத்துவமனை.

* வினா எண். 439—திரு. கே. சுப்பிரவேலு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சீர்காழியில் உள்ள அரசு மருத்துவமனையினை விரிவு படுத்துவதற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம், எனில் எத்தனை ஏக்கர் நிலம்.

(இ) அதற்கான தொகை எவ்வளவு

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்தரராஜன் : (அ) ஆம்.

(ஆ) சீர்காழி மருத்துவமனையை விஸ்தரிப்பதற்காக 4.39 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

(இ) ரூ. 33,689.40.

[முற்பகல் 9–30].

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, சீர்காழியிலே விஸ்தரிக்கப்பட இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தப் பணி எப்போது முதல் துவங்கப்பட இருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்தரராஜன் : தலைவர் அவர்களே, 1972 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 14 ஆம் தேதி யிட்ட அரசு ஆணைப்படி 4·39 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப் பட்டுள்ளது. ஈட்டுத் தொகையாக ரூ. 33,689.40 வழங்கப் பட்டிருக்கிறது. அந்த நிலத்தில் 1975 ஆம் ஆண்டு 20 படுக்கைகள் கொண்ட வார்டு ரூ. 1.15 லட்சம் செலவில் கட்டப் பட்டு, மருத்துவ மனையை எதிர் காலத்தில் விஸ்தரிக்க காலி நிலம் இருக்கிறது. இப்போது விஸ்தரிக்கும் எண்ணம் இல்லை.